**நீலகிரி மாவட்ட வேளாண் வானிலை முன்னறிக்க மடல்**

**வெளியீடு- தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகம், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், உதகை.**
**& இந்திய வானிலை ஆராய்ச்சி மையம்**

**தேதி 23.08.16**

சமீபகாலத்திற்கான வானிலை அறிக்கை:-

1. சமீப காலத்தில் மாவட்டத்தில் லேசான மழை பெறப்பட்டது.

2. தட்பவெப்பம் மற்றும் காற்றின் ஈரப்பதம் - அதிகபட்ச வெப்பநிலை 18º - 20º செ. மற்றும் குறைந்த பட்ச வெப்பநிலை 10º-12º செ. ஆக இருந்தது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 82-94% மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 80% - 90% இருந்தது. காற்றின் வேகம் 8-17 (கிலோ.மீ./மணிக்கு).

| வானிலை குறிப்புகள் | 24.08.16 | 25.08.16 | 26.08.16 | 27.08.16 | 28.08.16 |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 5 | 2 |
| அதிகபட்ச தட்ப வெப்பம் (º செ.) | 19 | 19 | 19 | 18 | 18 |
| குறைந்தபட்ச தட்ப வெப்பம் (º செ.) | 11 | 11 | 11 | 10 | 10 |
| மேகமூட்டம் (ஒக்டா) | 6 | 6 | 6 | 7 | 7 |
| அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 92 | 92 |
| குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 88 | 88 | 88 | 90 | 90 |
| காற்றின் வேகம் (கிலோ.மீ./மணிக்கு) | 14 | 14 | 14 | 14 | 14 |
| காற்றின் திசை | 270 | 270 | 270 | 270 | 270 |

**வானிலை சார்ந்த சாகுபடி குறிப்புகள்**

- மாவட்டத்தில் மூன்று நாட்ளுக்கு பிறகு மிதமான மழை வரும் என எதிர் பார்க்கப்படுகிறது.
- வாழை கண்றுகள் பயிரிடும் போது கண்று ஒன்றுக்கு 10 கிலோ தொழு உரம், 250 கிராம் வேப்பம் புண்ணாக்கு, 25 கிராம் ட்ரைகோடெர்மா, 25 கிராம் சூடோமோனஸ் இட்டு நடவும்.
- வெள்ளை பூண்டில் அறுவடையின் போது ரப்பராகும் நிகழ்வை தடுக்க, யூரியா உரத்தை தவிர்த்து அமோனியம் சல்பேட் இடவேண்டும்.

- தோட்டக்கலைப் பயிர்களில் சாம்பல் நிற வண்டின் தாக்குதல் அதிகம் காணப்படுகிறது. கட்டுப்படுத்த, பாசலோன் 35சதவீத மருந்தை, ஒரு லிட்டர் தண்ணீருக்கு, 1.5 மில்லி என்ற அளவில் கலந்து தெளிக்கவும்.

- மிளகு கொடியில் ஆகஸ்ட் மாதத்தில், இலைகளின் மீது, ஒரு சதவீத டிஏபி கரைசலை தெளிப்பதன் மூலம், மிளகு பிஞ்சு உதிர்தலை தவிர்த்து அதிக விளைச்சலை பெறலாம்.

- கூடலூர் பகுதியில், ஒரு பாக்கு மரத்திற்கு, 220 கிராம் யூரியா, 220 கிராம் சூப்பர் பாஸ்பேட் மற்றும் 230 கிராம் பொட்டாஸ் உரம் இடலாம்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
தோட்டக்கலை ஆராய்ச்சி
நிலையம், உதகை.